# உதயம்

நிறுவியவர்: கன்னிக்கண்ணன்



மே: 1964
25 காசு



# தேசீய பாதுகாப்பிற்காக

மூன்ருவது ஐந்து ஆண்டுத் திட்டத்தில் உள்ள எண்பது சதவிகிதத்திற்கு மேற்பட்ட திட்டங்கள் பாதுகாப்பின் முக்கிய பகுதியாய் உள்ளன; மீதியுள்ள திட்டங்களும் கூட பாதுகாப்புடன் மறைமுகமாக சம்பந்தம் கொண்டுள்ளன.

தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தி, பாதுகாப்பின் தசைநார்களை பலப்படுத்த இப்பொழுது திட்டம் நன்கு முடுக்கிவிடப் பட்டுள்ளது.

உருக்கு, இயந்திரக்கருவிகள், உலோகங்கள், கச்சாப்பொருட்கள் முதலியவற்றின் உற்பத்தி பெருக்கப்பட்டுள்ளது. இஞ்சினியரிங் மற்றும் இதன் சம்பந்தப் பட்ட தொழில்களின் திறன் முழுவதும் பயன்படுத்தப்படும்.

திட்டமிட்ட வளர்ச்சிதான் பாதுகாப்பின் ஆதாரமாகும். திட்டத்தை விரைவாகவும் திறனுடனும் செயல் படுத்துவதின் மூலம், பாதுகாப்பை உருவாக்கி உண்மையிலேயே இந்தியாவை வலிமை பெற்று திகழச் செய்கிறீர்கள்.



## திட்டமிட்ட வளர்ச்சி

DA 63/F 4

உதயம்

155326
211,N56
31K4

நிறுவியவர் :

கன்னிக்கண்ணன்

ஆசிரியை :

சகுந்தலா கிருஷ்ணன்

| | | |
|---|---|---|
| ஒளி-10 | மே—1964 | கதிர்-1 |

பத்தாவது ஆண்டில் "உதயம்" (தலையங்கம்)— 1

மதுரை பூகம்பத்தின் எச்சரிக்கை! (அக்கம்பக்கம்)— 3

பாரதிக்குப் பின் ஒரு தாசன்! 5

எழிலிசை இழந்த குழலிசை மன்னன் (அட்டைப்பட விளக்கம்) — 7

பஞ்சாமிர்தம் — 9

கண் அவன் (வேல்முருகன்)— 11

விளைத்திடுவோம்! பெருக்கிடுவோம்!! ("அறமன்னன்") — 14

தமிழ் வைத்தியக்கலை ("சித்தன்")— 15

காதல் அலை (உருத்திரமணி)— 17

தந்தையின் இலட்சியம் (சுப. கோ. நாராயணசாமி)— 20

அனிச்சப்பூ (எழில் முதல்வன்) 23

'உதயத்'தில் வெளியாகும் கதை, கட்டுரை, கவிதைகளில் வரும் பெயர்கள் அனைத்தும் கற்பனையே. எவரையும் குறிப்பிடுவன அல்ல.

# பத்தாவது ஆண்டில் 'உதயம்!'

உங்கள் இதயத்தின் இதயமான 'உதயம்' இதழ் ஆரம்பமாகி இன்றோடு ஒன்பது ஆண்டுகள் முடிந்து பத்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது என்பதை தெரிவிப்பதில் நாங்கள் மகிழ்வெய்துகிறோம்.

சென்ற ஒன்பது ஆண்டுகளில் ஒருசில மாதங்கள் 'உதயம்' பல்வேறு சமாளிக்க முடியாத சூழல்கள் காரணமாக வெளிவரத் தடை ஏற்பட்டதே தவிர மற்றப்படி 'உதயம் ஒளி' வீசத்தொடங்கியது முதல் இன்றுவரை அதன் வாழ்வும் வளர்ச்சியும் குன்றியதே இல்லை என்பதையும் உங்களுக்குத் தெரிவிப்பதில் மேலும் மகிழ்ச்சி அடைகிறோம்.

தேசிய சக்திகளுக்கு வலுவூட்டி, தேச பக்தியை வளர்த்தும், தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தியும் தாய்த் திருநாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் தன் வாய்ப்புக்கும் வசதிக்கும் சற்று அதிகமாகவே 'உதயம்' பணி புரிந்து வந்திருப்பதை எவரும் மறைக்கவோ, மறுக்கவோ மாட்டார்கள்.

தேசத்தை நாசமாக்கும் நீச சக்திகளுக்கு நெருப்பு வைக்கவும், பாமரர்களை வாட்டி, வதங்காமல் வாழும் கூட்டத்தின் கூட்டைக் கலைக்கவும், சமத்துவ ஜனநாயக நெறியை பரப்பவும் 'உதயம்' என்றுமே தயங்கியதும் இல்லை, மயங்கியதும் இல்லை என்பது தொடர்ந்து படித்துவரும் உங்கள் அனைவருக்கும் தெரியும்.

நாட்டின் முன்னேற்றத்திற்கும் மக்களின் வளர்ச்சிக்கும் அயராது தளராது சொந்த சுயநல பட்டம் பதவிகளை விரும்பாது தொடர்ந்து பணியாற்றிவரும் நமதருமைத் தலைவர் காமராஜர் போன்ற தியாக சீலர்களின் அருமை பெருமைகளை மலர் வெளியிட்டு மக்களுக்கு அறிவித்த பெருமை 'உதயம்' ஒன்றுக்குத்தான் உண்டு என்பதை சொல்லுவதிலும் மகிழ்ச்சி அடைகிறோம். அதே நேரத்தில் பதவிக்காகவே உயிர் வாழ்கிற சந்தர்ப்பவாதக் கூட்டங்களை மக்களுக்கு அறிமுகப் படுத்தி, அவர்களது சமயோசித வேடங்களைக் கலைப்பதிலும் 'உதயம்' பின்வாங்கியதில்லை. இதனால் 'உதயம்' ஒன்பது ஆண்டுகளில் அடைந்த, அடைந்துகொண்டிருக்கும் துன்பங்களும், துயரங்களும் சொல்லுந்தரமன்று. இருந்தும் உண்மையைச் சொன்ன பெருமையில் அதுவும் மிகத் துணிவோடு எடுத்துரைத்த பூரிப்பில் இந்தத் துன்ப துயரங்கள் எங்களுக்கு எம்மாத்திரம். தாற்காலிகமாக பெரும் கஷ்டநஷ்டங்களுக்கு ஆளாகலாமே தவிர நிரந்தரமாக உங்கள் இதயத்தின இதயமான "உதயம்" பத்திரிகையை எவரும் அடக்கி ஒடுக்கிவிடமுடியாது என்பதையும் நாங்கள் அறிவோம்.

நேர்மையும், நாணயமும், அன்பும், பண்பும் உள்ள ஒழுக்க சீலர்கள் எங்கிருந்தாலும் சரி, அவர்கள்

அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி, அதிகாரிகளாக இருந்தாலும் சரி, கலைஞர்களானாலும் சரி, கவிஞர்களானாலும் சரி, தொண்டர்களானாலும் சரி, தலைவர்களானாலும் சரி, கட்சி, கொள்கை, ஜாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி அவர்களைத் தேடிப் பிடித்து, பெருமைப்படுத்துவதிலும் 'உதயம்' என்றுமே முன்னணியில் நிற்கிறது என்பதையும் நியாய புத்தியுள்ள எவரும் அறிவர்.

இப்படி பலவழியிலும் நாட்டுக்கும் மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் தொண்டாற்றி வரும் 'உதயம்' இனியும் அதே பணியைத் தொடர்ந்து செய்யும் என்றும் உறுதி கூறிக் கொள்கிறோம்.

முன்தங்க வழியின்றி பின்தங்கி அனாதரவான நிலையில் தவித்து நின்று, நிலைமையில் தெளிவு பிறக்காத வேளை சூழ்நிலை கண்டு துடித்து நிற்கும் கோடானுகோடி பின்தங்கிய மக்களின் நல்வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் 'உதயம்' முன்னைவிடவும் அதிக வேகத்துடன் பணிபுரிய தன்னை அற்பணித்துள்ளது என்பதையும் உங்கள் நினைவுக்குக் கொண்டு வருகிறோம்

'உதய'த்திற்கு பெரும் பணக்காரர்களின் பின்பலமோ, பெரும் தலைவர்களின் ஒத்துழைப்போ, காங்கிரஸ்கட்சியையே ஆதரித்து வருதும் அந்தக் கட்சியின் ஆதரவோ எதுவுமின்றித்தான் இதுநாள்வரை 'உதயம்' தொடர்ந்து தன் பயணத்தைநடத்திவந்திருக்கிறது. இன்றைய தமிழக காங்கிரஸ் கட்சியினர் போதுவாக அசலுக்கு மரியாதை செலுத்துவதை மறந்து வெறும் போலிகளை நம்பியே அவர்களுக்கு அதிகமான சலுகைகளையும் வசதிகளையும் செயதுகொடுப்பதை பார்க்கும்போது தான் நம் நெஞ்சு பொறுக்குதில்லை. இந்த நிலை எத்தனை நாளை நீடிக்குமோ ?

'உதய'த்தின் முதலும் முதுகெலும்பும் மககளாகிய நீங்கள்தான. உங்கள் அன்பும் ஆதரவும் 'உதய'த்துக்கு முதுகெலும்பெனறால் எங்கள் ஊககமும் தளராத உழைப்பும் 'உதய'த்துக்கு முதலீடாகும். இவற்றை நம்பித்தான 'உதயம' வாழகிறது, வளருகிறது. இனறுபோல் என்றும் உங்கள் அன்பும் ஆதரவும் தொடர்ந்து இருக்கும் என்ற நம்பிககையுடன மீண்டும் புதிய பயணத்தை 'உதயம்' தொடங்குகிறது.

இந்நாள்வரை 'உதய'த்தின் வளாச்சியில் அன்பும அக்கரையும் காட்டியவர்களுக்கும், எங்கள் ஆக்கப் பணிகளுககு உறுதியும் ஊககமும் அளித்தவர்களுக்கும் 'உதயம்' தனது அன்புககரம் குவித்து வணக்கம் தெரிவிக்கிறது. ஜெய் ஹிந்த் !!




Omega Cables
Highway to Power

Omega's special featuers.
Electro-annealing
Continuous vulcanizing
Automatic extrusion control
Visual eccentricity control

Our present programme:
• V.I.R. Insulated wires & cables
• Tough rubber sheathed wires & cables
• Weather proof compounded wires & cables.
• Flexibles of all types P.V.C. Insulated and sheathed wires & cables.

Our expansion programme.
Paper Insulated lead sheathed power cables upto 11 K.V.
Aluminium Conductors Steel reinforced & all aluminium Overhead conductors.
Enamelled wire & paper & cotton covered winding wire.

FACTORY WILL GO INTO PRODUCTION—APRIL 1964.

Managing Agents:
SOUTH WIRE AGENCIES PVT. LTD
MADRAS
Regd. Office: 122/2 Mount Road Madras-6
ELEGANT/OIC

அழகிய பொழில். எங்கும் எழில்மிக்க நறுமலர்கள். இளந் தென்றல் இனிமையாக வீசுகிறது.

நானோ அச்சோலையில் நீராடும் விழிகளோடு புல் தரையில் அமர்ந்திருந்தேன். எவ்வளவு நேரம் அங்கே இருந்தேன் என்று தெரியாது. அலுத்து எழுந்தேன். கண்களைத் துடைத்துக்கொண்டேன். அருகே ஆற்றில் ஓர் அழகான தாமரைப் பூ கரையோரமாக மிதந்து போய்க்கொண்டிருந்தது. அதை எடுத்து வரலாமெனக் கரையை அணுகினேன்.

அப்போது அவர் எங்கிருந்தோ வந்தார்.

கரையில்லாத நான் கரையில்லாத மகிழ்ச்சியடைந்தேன்.

அந்த என் குறிப்பறிந்து அம்மலரை எடுத்து வந்தார்.

என் கையில் தந்தார். சிறிது நேரம் பேசாதிருந்தார்.

அவர் ஏதேனும் பேசுவார் என்று ஆவலுடன் எதிர் நோக்கினேன்.

'இப்போது உண்மையான தாமரை எது வென்று தெரியாமல் திகைக்கிறேன்!' என்றார்.

என் முகத்தைக் குறிப்பிட்டாலும் என் பெயரைக் குறிப்பிட்டதாகவே எனக்குப் பட்டது. பெரு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன்.

"உளமாரப் பொய் பேசுகிறீர்களே?" என்றேன்.

அவர் வாய்விட்டுச் சிரித்தார்.

"உங்கள் முகம் அவ்வளவு சிவப்பாக இருக்கிறது" என்றார்.

வெட்கத்தால் நான் தலை குனிந்தேன்.

மீண்டும் தலை நிமிர்ந்து பார்க்கும்போது அவர் அருகே இல்லை.

திடுக்கிட்டேன். திகைத்தேன்.

அவர் மிகச் சேய்மையில் போய்க் கொண்டிருந்தார்.

வாய்விட்டுக் கூவவும் கதறவும் விரும்பினேன்.

என்னால் முடியவில்லை.

திடீரென்று விழித்துக்கொண்டேன்.

வெறுங் கனவு.

ஏதோ ஓர் அச்சம் என்னுள் குடிகொண்டது.

## செல்வன்

நான் வேறு ஊருக்கு மாற்றம் பெற்ற ஆணை வந்தது. இன்னும் ஒரு வாரத்திற்குள் நான் புறப்பட வேண்டும்.

இரண்டு நாள் கழித்து அவளைக் கண்டேன். சாலையில் தூரத்தில் அவள் வருவதைக் கண்ட போது இன்பமும் துன்பமும் ஒருங்கே என் மனத்தில் நடனமிட்டன. காதல் அலையில் அகப்பட்ட துரும்பாகித் தத்தளித்தேன்.

அவள் அருகே வந்தாள்.

பல ஆண்டுகள் கழிந்து மீண்டும் சந்திப்பதுபோல் இருந்தது.

எங்கள் முகங்கள் மகிழ்ச்சியால் மலர்ந்தன

ஒரு கணந்தான்.

அவள் முகம் மலர்ச்சியை இழந்தது.

பேச மிகவும் துன்புற்றாள்.

நான் என்ன சொல்வேன்? என்னால் பேச முடியவில்லை.

அவள் கண்கள் கலங்கின.

அதன்பின் எப்படியோ பேசினேன்.

பிரிந்தாலும் விரைவில் அவளை என்னுடையவளாக ஏற்றுக்கொள்ளத் திரும்பி வருவதாகத் தெரிவித்தேன்.

அவள் கண்களில் மகிழ்ச்சி 'பளிச்'சிட்டது! இமைகளில் கலக்கத்துடன் திரண்ட கண்ணீர், ஆனந்தக் கண்ணீராக உருண்ட அக்காட்சியை நான் என்றும் மறவேன்! ❋

# தந்தையின் இலட்சியம்

—சுப. கோ. நாராயணசாமி

கோட்டும் சூட்டும் போட்டுக்கொண்டு யார் எதிரே வந்தாலும் சரிதான் வீரப்பக் குடும்பன் இவ்வாறு தான் நினைப்பான், “ஒரு நாளைக்கு என் மகன் சுப்பனும் இது மாதிரி உடுத்தி ராஜா மாதிரி உடுத்தி ராஜா மாதிரி வருவான்...” என்ற எண்ணம் தான்.

இப்பொழுது சுப்பன் நகரத்தில் ஐந்தாவது பாரம் படித்துக் கொண்டிருந்தான். வீரப்பனுக்கு ஒரே மகன் அவனுடைய ஒரே இலட்சியம் எப்படியும் தன் மகனை ஒரு பட்டதாரியாக்கி சர்க்கார் வேலையில் அமர்த்த வேண்டும் என்பது தான்.

இந்த ஆசை தோன்றுவதற்கும் ஒரு மூல காரணம் இருந்தது, ஒவ்வொரு வியாழக்கிழமையும் அல்லி நகரம் சந்தைக்குப் போவது வழக்கம். நகரத்தின் ஆரம்பத்தில் ஒரு சர்க்கார் காரியாலயம் இருக்கிறது. அதைச்சுற்றிலும் நல்ல வேப்பமரங்கள். ரஸ்தா அதன் அருகில் தான் சென்றது. சந்தையில் சாமான்களை விற்றுவிட்டோ, அல்லது சாமான்களை வாங்கிக்கொண்டு வரும்போதோ ஜனங்கள் அந்த வேப்ப மரத்தடியில் குந்தி வெற்றிலை போட்டுச்சற்று ‘சிரமபரிகாரம்’ செய்து கொள்வார்கள்.

கிழவனும் அப்படித்தான், அப்படி உட்கார்ந்து காரியாலயத்தில் நடைபெறும நிகழ்ச்சிகளை ஜன்னல் மூலம் பார்ப்பான். வெயிலின் கொடுமையின்றி, அந்த அழகான கட்டிடத்தில் சுழலும் விசிறிகளுக்கு அடியில் காகிதத்தில் கிறுக்கிக் கொண்டிருக்கும் குமாஸ்தாக்களைப் பார்ப்பான் அதிசயமாக. இப்படி ஒவ்வொரு சந்தை நாளும் பார்க்கத் தவறமாட்டான். அப்படிப் பார்த்த ஒரு நாளில் தான் கிழவனுக்கு ‘தன் மகனும் இதே போல வேலையில அமர்ந்து கோட்டும் சூட்டும் போட்டு எல்லோரும் ஏறிட்டுப் பார்க்கும்படியாக வாழவேண்டும். என்ற நினைப்பு ‘ஞானோதயம் போல மின் வெட்டியது.

அதற்கான வழிவகைகளை உள்ளூர் கிராம முன்சிப் சேசுவையரிடம் கேட்டபோது அவர் நமுட்டுச் சிரிப்புச் சிரித்தார். “டேய் வீரப்பா; உன் மகனுக் கெதுக்குடா இந்த சர்க்கார் வேலே? உனக்கிருக்கிற நிலத்தை அவன் பார்த்தாலே போதுமே! அஞ்சு வரைக்குப் படிச்சா போதும்....மேலே படித்தால் செலவு தான் அதிகமாகும்....’ என்றார்.

இதைக் கேட்டதும் வீரப்பனுக்கு எரிச்சல் தான் மூண்டது. பேசாமல் திரும்பினான். ஆனால் மனதிற்குள் ‘இந்த ஐயர் மட்டும் தமது மகனை கலெக்டருக்குப் படிக்கப் போடனுமுண்ணு நஞ்சையை எல்லாம் விக்கிறாரு. என் மகன் மட்டும் படிக்கக் கூடாதாம் ... ஊம் .... எப்படியும் நான் இந்த சேசுவையருக்கு முன்னால் நான் எனது மகனைப் படிக்க வைக்கலேன்னா, நான் வீரப்பன் இல்லே....” என்று கருவிக்கொண்டான்.

அப்புறம் என்ன? ஐந்து தாண்டியதும் நகரதில் உள்ள பள்ளியில் பஸ்ட்பாரத்தில் சேர்த்துவிட்டான் வீரப்பன். சுப்பனும் படிப்பில் சூட்டிக்கையாகவே யிருந்தான், தனது மகனுக்கு செலவுக்கு வேண்டுமென்றே இரவும் பகலும் வீரப்பன் பாடுபட்டான். சுப்பன் என்.எஸ்.எஸ்.எல். சி.யும் தேறிவிட்டான்.

வீரப்பனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி, பறைச்சேரியில் முதன் முதலில் அந்தப் படிப்பை முடித்தவன் தன் மகன் என்ற நினைப்பில் ஊராருக்கெல்லாம் தெரியும்படியாக ‘மேளம்’ கொண்டுவந்து காளியம்மனுக்கு பூஜை வைத்தான்.

அடுத்து கல்லூரிக்குப் போகவேண்டுமென்று சுப்பன் சொன்னான். நல்ல உத்தியோகம் வேண்டுமென்றால் பி.ஏ. படிக்கவேண்

டும் என்று யாரோ சொன்னது நினைவில் இருந்ததால் உடனே தனது புஞ்சையில் ஒரு ஏக்கரை விற்று மகனை அனுப்பி வைத்தான். சேரியிலேயே வீரப்பனுக்குத் தான் நான்கு ஏக்கர் நஞ்சையும், ஐந்து ஏக்கர் புஞ்சையும் இருந்தன.

பின் தங்கிய வகுப்பினர் என்ற ஹோதாவில் சர்க்காரும் சுப்பனுக்கு உதவி செய்தது. இந்த நான்காண்டுகளில் மதுரையில் படித்த சுப்பனுக்கு எவ்வளவோ அனுபவங்கள் ஏற்பட்டன. பலவிதமான நண்பர்களின் சகவாசம், அற்புதமான ஆங்கில நாவல்கள் எல்லாமே அவனை பரிபூரணமாக மாற்றிவிட்டன. விடுமுறைகளில் கூட ஊருக்குச் செல்ல மனம் வராது. 'அந்த நான் சென்ஸ் கிராமத்தில் பொழுது போக்குவதற்கு என்ன இருக்கிறது' என்பான் நண்பர்களிடம்.

இருந்தாலும் 'இன்டர்மிடியட் எழுதிவிட்டு விடுமுறையில் ஊருக்கு வந்தான். இதுவும் தாயார் படுத்த படுக்கையில் இருந்தாள் என்ற கடிதம் கண்டுதான். மகனைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான் வீரப்பன்.

நீண்ட கால் சட்டை போட்டுக் கொண்டு வாயில் சிகரட் புகைத்துக்கொண்டு வந்த மகனைப் பார்த்து மனம் பூரித்துப் போனான் வீரப்பன். வந்த இரண்டு நாட்களில் தாயும் மறைந்தாள். ஏதோ பேருக்கு இரண்டு துளி கண்ணீர் விட்டான் சுப்பன். அவனுடைய மனமெல்லாம் நண்பர்கள் இந்த நேரத்தில் கொடைக்கானலில் என்ன செய்து கொண்டிருப்பார்கள் என்ற கற்பனையில் ஈடுபட்டிருந்தது. தாயின் கருமாதி முடிந்தவுடன் தந்தையிடம் நூறு ரூபாய் வாங்கிக்கொண்டு புறப்பட்டான். நியாயப்படி சர்க்கார் கொடுத்த 'ஸ்காலர்ஷிப்' பணத்திற்குமேல் வருடத்திற்கு ரூபாய் மூன்னூறுதான் பிடிக்கும், ஆனல் சுப்பன் செய்த செலவோ? சினிமாவுக்கும் கீழ்த்தரமான பத்திரிகைகளுக்கும். ஆடை அலங்காரப் பொருள்களுக்கும் செலவு தண்ணீராய்த்தான் நினைத்து பணத்தை வீசினன். இல்லாவிட்டால் இரண்டு வருஷங்களில் ஐந்து ஏக்கர் புஞ்சையும் விற்கவேண்டியதிருக்குமா?

மூன்றுவதாண்டு சுப்பன் ஒரு மகத்தான காரியம் செய்தான்-அது தான் தன் பெயரை 'சுகுமாரன்' என்று மாற்றிக் கொண்டது தான். சுப்பன் என்ற பெயர் 'அநாகரிகமாக இருந்தது என்பதால்தான். சுப்பன் தான் கறுப்பாகப் பிறந்ததுபற்றி சற்றுவருந்துவான். இருந்தாலும் முகத்தின் கவர்ச்சியும், சுருள் முடியும் அவனுக்கு அலாதி அழகையே தந்தன.

சுப்பன் பி. ஏ. பட்டம் பெறுவதற்கு முதல் ஆண்டு பரீட்சையில் தவறிவிட்டான். ஆகவே பட்டம் பெறும்பொழுது வீரப்பனின் மூன்று ஏக்கர் நஞ்சை 'காலி'யானது. இனி பாக்கி ஒரே ஒரு ஏக்கர் நஞ்சை தான் வீரப்பனின் சொத்து.

இப்பொழுது வீரப்பனும் சற்று மனம் தளர்ந்துவிட்டான். இருந்தாலும் மாதம் ஒரு முறை சந்தைக்குச் செல்லும்பொழுதெல்லாம் கோட்டும் சூட்டும் அணிந்து வருபவர்களைக் காணும் பொழுதெல்லாம் ஏதேதோ இன்பக் கற்பனைகளைத் தீட்டி மகிழ்வான்.

நெடுநாட்கள் எதிர்பார்த்த அந்த நாள் வந்தது. சுப்பன் பி.ஏ. தேறிவிட்டான். இப்பொழுது வீரப்பன் இந்தச் செய்தியை ஊரில் ஒவ்வொரு வீட்டிலும் சென்று மகிழ்ச்சியோடு 'அறிவித்தான்.' வழக்கம் போல இந்த ஆண்டும் காளியம்மனுக்கு பூஜை வைக்கத் தவறவில்லை.

கிழவனுக்கு உதவியாக அவனுடைய தங்கை மகள் சொர்ணம், மனைவி இறந்தவுடனேயே வந்தாள், கிழவனுக்கு தமமகனுக்கு சொர்ணத்தைக் கட்டிக்கொடுக்கலாம் 'என்ற ஆசை, சொர்ணமும் பி. ஏ. படித்த மாப்பிள்ளையைக் கட்டிக்கொள்ள மனதில் மாளாத கனவுகளைக் குவித்து வைத்தாள்.

விடுமுறையில் கிழவனின் ஓயாத நச்சரிப்புக் கடிதங்களைக் கண்ட பிறகு சுப்பன் என்கின்ற சுகுமாரன் வந்தான். கிழவன் மகனைப்

பார்த்துப் பார்த்து பூரித்தான் சொர்ணமோ தன் அத்தானை ஆடி ஓடி உபசரித்தாள். ஆனால்சுப்பனோ இந்தப்பட்டிக் காட்டில் தனது பொன்னானகாலம் வீணாகிறதே என்ற நினைவோடு இயங்கி வந்தான்.

ஒரு நாளைக்கு சுப்பன் எழுதிப் போட்டிருந்த வேலைக்கு 'ஆர்டர்' வந்தது பட்டணத்தில் போய் வேலை ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. இதைக் கேட்டவுடன் வீரப்பன் தன் இலட்சியத்தை அடைந்துவிட்டதாக ஆனந்தக் கூத்தாடினான்.

மகனிடம் "சுப்பா! இப்போ வேலையும் கிடைச்சுட்டது. உன் கலியாணத்தையும் முடிச்சுட்டுக் கூடவே மனைவியையும் அழைச்சுட்டுப் போனா உனக்கு ஒத்தாசையாகயிருக்கும்" என்றான்.

சுப்பன் சிரித்தவாறே" பெண் யாரப்பா?" என்று கேட்டான்.

"ஏன், நம்ம சொர்ணம் தான்!"

சுப்பன் இதைக்கேட்டு மனதிற்குள் சிரித்துக்கொண்டான். 'பாம்படம் அணிந்த நீண்ட காதுகளும், எண்ணெய் வடியும் முகமும் கொஞ்சம்கூட நாகரிகமோ, படிப்போ இல்லாத சொர்ணத்தை மணப்பது என்பதை நினைக்கும்போதே அவனுக்கு அருவருப்பாக இருந்தது.

இருந்தாலும் வெளியே "அப்பா! கலியாணத்துக்கென்ன அவசரம்... முதல்லவேலையை ஒப்புக்கொள்கிறேன். இப்பொ பட்டணம் போறதுக்கும் சம்பளம் வர்ரவரைக்கு செலவுக்கும் பணம் தேவை டிபாசிட்'க்கும் இரு நூறு ரூபா வேணும்..." என்று இழுத்தான்.

மறுநாளே சேசுவையரிடம் இருந்த கடைசி ஒரு ஏக்கர் நஞ்சை நிலத்தையும் விற்று ரூபாய் ஆயிரத்தை மகனிடம் கொடுத்தனுப்பினான்.

மாதங்கள் நான்குஉருண்டன. இப்பொழுது கிழவன்தான் கூலி வேலை செய்து பிழைக்க நேர்ந்தது. மகனிடமிருந்து ஒரு கடிதம்கூட இல்லை. வெயிலில் மழையில் நனைந்து கொண்டே வேலை செய்ததால் கடுமையான ஜுரம் வந்துவிட்டது கிழவனுக்கு....பாவம் இப்போது சொர்ணம்தான் வேலை செய்து கிழவனையும் காப்பாற்றுகிறாள். கிழவன் தினசரியும் தபாலை எதிர்பார்த்தான்.

அவன் எதிர்பார்த்த தபாலும் ஒரு நாள் வந்தது. பக்கத்துவீட்டுப் பையன் ஒருவனிடம் கொடுத்து வாசிக்கச் சொன்னான். கடிதத்தின் விஷயம் இதுதான்.

சுப்பன் தான் வேலை பார்த்த அலுவலகத்தில் உள்ள ரோஸி என்ற பெண்ணை மணந்து கொண்டானாம். ஆகவே சொர்ணத்தை வேறு யாருக்கு வேண்டுமானாலும் கலியாணம் செய்து கொடுக்கும்படியும். இனிமேல் தான் அந்தப் பட்டிக்காட்டு மண்ணில மிதிப்பதாக யில்லை யென்றும் கிழவனுக்குப் பணம் அனுப்ப இயலாதென்றும் எழுதியிருந்தான்.

இதைக் கேட்டவுடன் ஆயிரமாயிரம் இடிகள் கிழவன் தலையில் விழுந்தது போலிருந்தது. அவன் மனமே சூனியமாகிவிட்டது. இந்த அதிர்ச்சியில் இந்த உலகில்கூட இரண்டு நாட்கள் இருக்க வேண்டியவன், இரண்டு நாட்கள் முந்தியே பயணமாகிவிட்டான். ✻


## உதயம் சந்தா விபரம்

✻

சிறப்பு மலர்கள் உள்பட 'உதயம' ஓராண்டு சந்தா ரூபாய் ஐந்து. 'உதயம்' உங்கள் இல்லம் தேடிவர இன்றே ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

ஓராண்டுக்குக் குறைந்த சந்தாக் கிடையாது.

விபரங்களுக்கு

நிர்வாகி, "உதயம்"

சென்னை-2



# அனிச்சப்பூ

## 7

" இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியர்என் கணவனை
யானா கியர்நின் நெஞ்சு நேர் பவளே !"

—குறுந்தொகை.

எழில்முதல்வன்

அன்று ஞாயிற்றுக் கிழமை. கொல்லைப் பக்கத்தில் பூத்திருநத மல்லிகை அரும்புகளைப் பறித்துக் கொண்டிருந்தாள் எழில்மதி. தோட்டத்தின் புழக்கடையில், கேணியை அடுத்துச் சேவல் ஒனறு நின்றுகொண்டிருந்தது ஒரு கொத்துக் கொத்துவதும் 'வெடுக்' 'வெடுக்' என்று தலையை இப்புறமும், அப்புறமும் திருப்புவதுமாகச் சோம்பேரித் தனததைச் சுவைத்துக் கொண்டே நடை போட்டது சேவல். தளதளப்பான நல்ல சதைப் பிடிப்புடைய கொண்டை உடலில் நலல வாளிப்பு, நல்ல உயரம், கம்பீரமான சேவல் அது.

சேவல் 'கொக்' 'கொக்' என்று நீளக் குரல் கொடுத்துக் கொண்டே எட்டி நடைபோட்டது. தென்னை மரத்தை வளைத்து அணைத்துக்கொண்டு ஓடியது சாக்கடை. கரையில் வாரிப்போட்ட சாக்கடைச் சேறு ஈரம் வடியாமல் பளபளத்தது. அருகில் இருந்த 'பொத' 'பொத' வென்று கால்கள இறங்கும் மண்ணில் அசுர வேகத்தில் கால்களால மாற்றி மாற்றிக் கோடு கிழித்துக் கிளரி ஓயாமல் கொதறிக் கொண்டு இருந்தது. பின் அது உடலை ஒரு முறை சிலிர்த்துக்கொண்டு சாக்கடையில் இறங்கி, எதிர்க் கரையில் ஏறி காலை உதறிக் கொண்டு நீளமாகத் தரையில் சேற்றுக்கோலம் போட்ட வண்ணம் 'க்ளக்' 'க்ளக்' என்று அடித் தொண்டையால் கத்திக்கொண்டே ஓடியது.

பூப்பறித்துக் கொண்டிருந்த எழில்மதி இந்தக் காட்சியை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருநதாள். சேவல் தூரத்தில் இருந்த பெட்டையை அணுகியதும, பெட்டைக் கோழி கண்ணை ஒரு வெட்டு வெட்டிப் பார்த்தது. அந்தக் காட்சி, காதலைத் தொடு உணர்வின் மூலம்தான் வெளிபபடுதத வேண்டுமா ? பார்வை போதாதா என்று கேட்பது போல் இருந்தது. காதலுக்கு அடிப்படையாய் இருபபது உடற்கவாச்சியே என்று சொல்லுவது போல சேவல் பெட்டையை தன் மூக்கால நீவிக் கொடுத்தது.

சில வேளைகளில் நாம் காணும ஒரு காட்சி, அதனோடு தொடர்புடைய வேறு ஒன்றை நினைவூட்டுவதாக அமைந்துவிடுவது உண்டு. அந்த வகையில்எழில் மதியின் நினைவுகள் முதல்நாள் நடந்த நிகழ்ச்சிகளை நோக்கிப் பற்றிப் படர்ந்தது· நநதனுடைய உருவமே அவள் மனத்தில் முழுமையாக நிறைந்திருந்

த்து. தன் அந்தரங்கம் அவனுக்காகத் துடித்துக் கொண்டிருப்பதாகவே உணர்ந்தாள்.

நந்தனுடைய உருவம் உயிர்த்துடிப்பு நிறைந்த உருவம். சரக்கொன்றையில் சந்தன நிறம் பிரதிபலித்தாற் போன்றே தங்கம் பழுப்பு வண்ணம், விரிந்த தோள்கள், பரந்த நெற்றி, பரந்த நெற்றியின் அழகுக்குக் குறையாத முகம், முகத்திலே அழுத்தமும் நளினமும் காட்சியளிக்கும். பெண்மை என்று சொல்லிவிட முடியாதபடி ஒரு மென்மை ஊடுருவிக் கலந்திருக்கும். அவன் கண்கள் தனி அழகு உடையவை. அருவின் ஒளியும், அருளின் தன்மையும் அதில் பொங்கித் ததும்பும். உணர்ச்சிகளைப் பளிங்குபோலப் பிரதிபலிக்கும் அக் கண்கள் கோணம் காட்டிக் குறும்பாக மின்னும்போது தனி அழகுடையனவாகத் தோன்றும். கள்ளங் கபடில்லாத அவனது கண்களைப் பார்க்கும் யாருமே மயங்காமலோ, நட்பு கொள்ளாமலோ இருக்க முடியாது. அவனது உறுதியான நெஞ்சத்தை எடுத்துக் காட்டுவது போல இதழ்களும் முகவாயும் திருத்தமுற அமைந்திருக்கும் நந்தனைப் பற்றி நினைக்கின்ற போதெல்லாம் தன் நெகிழும் நெஞ்சினைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாதவளாக அந்த நினைவிலேயே கரைந்து கரைந்து ஒன்றியவள் ஆனாள்.

அத்தை எதிர்வீட்டுப் பட்டு வாத்தியாரின் தாயாரோடு திருவிடைமருதூருக்குச் சென்றிருந்தாள். திருவிடைமருதூர் கோயிலில் அன்று திருவிழா. அத்தை எங்கேனும் தேர் திருவிழா என்றால் போகத் தவறமாட்டாள். திருவிடைமருதூரில் ஆண்டுதோறும் திருவிழா சிறப்பாக நடக்கும். மூவர்களாலும் பாடப்பட்ட தலம் அது. ஒவ்வொரு தலத்திலும் உள்ள இறைவனுக்குக் கபாலீஸ்வரர், ஏகாம்பரேஸ்வரர் என்பது போலப் பெயர்கள் அமைந்திருக்க, இடை மருதூர் இறைவருக்கு மட்டும் மகாலிங்கம் என்ற பெயர் வழங்கப்படுகிறது. சோழ நாட்டையே ஒரு திருக்கோயிலாகக் கொண்டு, திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமியை மூலஸ்தானமாகக் கொண்டால், கோயில் சிற்ப முறைப்படி, இந்த மூலஸ்தானத்திற்குத் திருவலஞ்சுழி விநாயகர் சந்நிதியாகவும், சுவாமிமலை சுப்பிரமணியர் சந்நிதியாகவும், சிதம்பரம் நடேசர் சந்நிதியாகவும், திருவாரூர் சோமேஸ்கந்தர் சந்நிதியாகவும், ஆலங்குடி தெக்ஷிணாமூர்த்தி சந்நிதியாகவும் விளங்குவது ஓர் அற்புதமாகும்.

திருவிடைமருதூர் சென்றிருந்த அத்தையை எதிர்நோக்கிக் கொண்டே, ஆறு வயதுச் சிறுவன் ஒருவன் முதல்நாள் படித்த வாய்ப்பாட்டை மீண்டும் மீண்டும் மனத்தில் நினைவு படுத்திக் கொள்வதுபோல அவள் பழைய நினைவுகளை மனத்திற்குக் கொண்டுவருவதும், நழுவி ஓடும் நினைவுகளை மீண்டும் தேடிப் பிடிப்பதுமாகத் தவித்துக் கொண்டிருந்தாள். "சுருதி சேர்க்கப்பட்ட வீணையில் ஒரு தந்தியை மீட்டும்போது அடுத்த தந்தியிலும் நாத-அலைகள் எழுகின்றனவே! இரு உள்ளங்கள் இணைந்து இருக்குமானால் ஒன்றன்பால் எழுகின்ற எண்ண அலைகள் அதனோடு இணைந்த மற்ற மனத்திலும் சலனத்தை ஏற்படுத்தாமலா இருக்கும்? அப்படியானால் நான் அவரை நினைக்கும்போதெல்லாம் என்னுடைய ஞாபகமும் அவருக்கு எழுமல்லவா? ஆனால் அவர் என்னை விரும்புகிறார் என்பது என்ன நிச்சயம்?" என்று தன்னுள் பலவாறாக எண்ணிக்கொண்டே கற்பனை உலகிலே மிதந்து கொண்டிருந்தாள்.

பூக்குடலையில் பாதிக்கு மேல் மலர்கள் நிறைந்து விட்டன. இலைகளின் பின்னே மறைந்துகொண்டு ஒரு சில மொட்டுக்கள் மலர்ந்தும் மலராமல் காட்சியளித்தன. எழில்மதியின் மனம் பூவையும் மனித மனத்தையும் ஒரு கணம் ஒப்பிட்டுப் பார்த்தது. பூக்கள் மலர்ந்த பிறகுதான் கனியாக மாறுகின்றன, மனித மனமோ அனுபவத்தால் பழுத்தபிறகுதான் மலர்ச்சி பெறுகின்றது என்று அவள் தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

கதிரவன் மஞ்சள் வெயில் அவளது மாம்பழக் கன்னக் கதுப்பில் விழுந்து பளபளத்தது. அவளது காதில் இருந்த கம்மல் மஞ்சள் வெயிலை ஒளி ரேகைகளாக மாற்றி அவளது கன்னச் சரிவில் தாவி விளையாடியது. தாள கதியில் இணைந்த ஓர் இனிய பண்போல் ஒலித்து ஓய்ந்த சிரிப்பைக் கேட்டுத் திரும்பி நோக்கினாள் எழில்மதி. அவளது வகுப்புத் தோழி வசந்தி அங்கே நின்றுகொண்டிருந்தாள்.

"வா சந்தியா, வா....வா" என்று ஆவல் மீதூர, அவளது கரத்தைப் பிடித்து இழுத்துக்கொண்டு வீட்டுக்குள் சென்றாள். பூக்

குடலையை மாடத்தில் வைத்துவிட்டு சட்டெனக் காப்பி தயார்செய்து வசந்திக்குக் கொடுத்தாள். அதற்குள் அத்தை வீட்டுக்கு வந்துவிடவும், அடுக்களை வேலைகளை அவள்பால் விட்டுவிட்டு, வசந்தியை அழைத்துக்கொண்டு கொல்லைப் பக்கமாகச் சென்றாள். கல்லூரி விழாவில் எழில்மதியின் இசை நிகழ்ச்சி சிறப்புற அமைந்தமைக்குத் தன் பாராட்டுக்களை வசந்தி சொல்லியபோதும், அவளை அளவுக்கு மீறிப் புகழ்ந்து "எழில்மதி, நீ பிற்காலத்திலே பெரிய கலையரசியாக ஆகிவிட்டால் என்னையெல்லாம் மறந்து விடுவாய் அல்லவா என்று கேட்டுக்கொண்டே செல்லமாக அவள் கன்னத்தைத் தட்டிய போதும், அந்தப் புகழ்மொழிகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல் நாணம் மேலிடத் தலை குனிந்து கொண்டாள். வசந்தி, மறுநாள் தன் வீட்டில் நிகழவிருக்கும் விருந்திலே கலந்துகொள்ள வேண்டும் என்று அழைத்தபோது அந்த அன்புக் கோரிக்கையைத் தட்டிக்கழிக்க முடியாதவளாக எழில்மதி தவித்தாள். காரிலேயே அழைத்துச் சென்று, மீண்டும் காரிலேயே கொண்டுவந்து விடுவதாகக் கூறி அத்தையிடமும் வசந்தி அனுமதி வாங்கிக்கொண்டாள்.

மறுநாள் வசந்தியின் வீட்டிலிருந்து கார் வந்தவுடன் எழில்மதி புறப்பட்டாள். புறப்படுவதற்குள்ளேயே கார் டிரைவர் " அம்மா உங்களை எதிர்பார்த்து இன்னேரம் சின்னம்மா வாசலையே பார்த்துகிட்டிருப்பாங்க" என்று நினைவூட்டினான். வசந்தியின் வீடு காந்தி நகரில் இருந்தது. காந்திநகரை எழில்மதி அடைந்தபோது, வசந்தியே எதிரில் வந்து வரவேற்று காரின் கதவைத் திறந்துவிட்டு அழைத்துக் கொண்டு போனாள்.

வாழ்க்கையிலே நடக்கும் பெரும்பாலான நிகழ்ச்சிகள் எதிர்பாராதனவே ஆகும். எழில்மதி அந்த வீட்டு விருந்தில் நந்தனைச் சந்திக்க முடியும் என்று எதிர்பார்க்கக் கூட இல்லை. விருந்தின் இடையில் பெண்கள் பகுதியில் எழில்மதி இருந்ததையும், ஆண்கள் பகுதியில் நந்தன் இருந்ததையும் ஒருவரை ஒருவர் கண்டுகொண்டனர். எழிலமதிக்கு அந்தக் கணத்தில் இமைகள் படபடத்தன. தன்னுள் தோன்றும் மாற்றங்களைப் புறத்தே புலனாகாமல் அடக்கிக்கொண்டு தோழியோடு பேசிக் கொண்டிருந்தாள். ஆனால் இடை இடையே அந்த இருவரிடையே வளர்ந்து கொண்டிருந்த விழிமொழிகளையும், கண் கதைகளையும் வசந்தி உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

பெரிய இடத்து விருந்து என்பதற்கேற்ப உணவு வகைகள் பலவாக இருந்தன. வேறு வகையான எண்ணச் சுழலில அமிழ்ந்திருந்த எழில்மதி ஏதோ பேச வேண்டுமே என்பதற்காக "வசந்தி, தக்காளிப் பழம் நன்றாக இல்லையே?" என்றாள்.

"ஆமாம்....பலாப் பழத்தைத் தின்ற வாய்க்குத் தக்காளிப் பழம் இனிக்காதுதான். அஜந்தா ஓவியங்களைப் பார்த்த ஒருவனுக்கு 'மாடர்ன் ஆர்ட்' அழகு இலலாதது போலத் தான் தோன்றும். சுவை என்னவோ எல்லாப் பொருள்களிலும் இருக்கத்தான் செய்கிறது. மனோரஞ்சிதததிலே மணம் அதிகம் உண்டு. முலலை மலரிலேயும மணம் உண்டு. ஆனால நுட்பமானதாக இருக்கும்;" என்று வசநதி சொன்னாள். அவள் இயற்கையாகச் சொன்ன வார்த்தைகள் எழில்மதியின் அப்போதைய மனநிலையில் சரியாகவே இருந்தன.

விருந்து முடிந்ததும் எழில்மதி புறப்பட்டாள். அவளுக்கு வீட்டுக்குச் செல்ல கார் ஏற்பாடாகியது. காரின் அருகே எழில்மதி செல்லும்போது நந்தனைக் கண்டாள். "வணக்கம்" என்று இருவரும் ஒருசேர கைகுவித்துக் கொண்டனர்.

"நான் நீங்கள் இங்கு வந்திருப்பீர்கள் என்று எதிர் பார்க்கவில்லை" என்றான் அவன்.

"நானும்தான்"

அதற்குமேல் என்ன பேசிக்கொள்வது என்று இருவருமே திகைப்பது போன்ற பாவம் இருவர் முகத்திலும் தோன்றியது.

"அதுதான் எங்கள் வீடு" என்று தெருவின் கோடியில் தெரிந்த மாடி வீட்டைச் சுட்டிக் காட்டினான் நந்தன். எதையோ புனிதமான ஒன்றைக் கண்டு அது இருககும் திக்கு நோக்கித் தொழும் பக்தனைபபோல அவன் சற்று குனிந்து நிமிர்ந்தான். பிறகு இருவரும் பிரிந்தனர்.

ஒத்த உணர்ச்சியோ, அல்லது ஒரே இடத்தில் வாழ்வதோ, அலலது பலகால் கண்டு பழகுவதோ இருவரிடையே ஏற்படும் அன்பிற்குக் காரணஙகளாக அமையும என்பர். இன்னும் சிலரோ அன்பு என்பது

மடமை நிறைந்தது; அது காரணம் பற்றித் தோன்றுவதில்லை என்றும் கூறுவர். எழில் மதி-நந்தன் இருவரிடையே அரும்பிப் பூத்து காய்த்துக் கனிந்த காதலுக்கு மேற்கூறியவற்றுள் ஏதோ ஒன்றுதான் காரணமாக இருந்திருக்க வேண்டும். காரணமின்றிக் காரியம் இல்லை என்பது அளவை நூல் கருத்து. ஆனால் மனிதனுடைய சிந்தனை பல சமயங்களில் காரியத்தைத்தான் உணர முடிகிறது. பெரும்பாலான நிலைகளில் காரியத்திற்குரிய காரணங்கள் புலப்படாத புதிராகவே அமைந்து விடுகின்றன.

நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. கால வேகத்தில் ஒரு ஆண்டு என்பது ஒரு கணமாகவே உள்ளது. தேர்வும் நெருங்கிவிட்டது. எழிலமதி படிக்கத் தொடங்கினாள். ஓராண்டு காலத்திற்குள் அவள் பெற்ற அனுபவங்கள், இதயத்தையே பிடித்துக் குலுக்குவதுபோன்ற நிகழ்ச்சிகள்-எல்லாம் அவள் மனத்துள் தோன்றும் என்றாலும், மனத்தைச் சமநிலைப் படுத்திக் கொள்ளும் ஆற்றல் உடையவளாக இருந்தமையால், எல்லாவற்றையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டுப் பாடத்தில் கவனத்தைச் செலுத்த முயன்றாள்.

அன்று, தமிழ்ச் செய்யுள் ஏட்டை விரித்து வைத்துக்கொண்டு, படிக்க ஆரம்பித்தாள் "இந்தப் பிறவியில் நம் அன்பு வெற்றி பெறா விட்டாலும், அடுத்த பிறவியிலாவது நீயே எனக்குக் கணவனாகவும், நான் உனது காதலுக்குரியவளாகவும் ஆவோமாக!" என்ற கருத்துடைய 'இம்மை மாறி மறுமையாயினும் நீயாகியர் என் கணவனை யானாகியர் நின் நெஞ்சுநேர் பவளே' என்ற குறுந்தொகை வரிகளை படித்தாள். பாட்டிலே ஊன்றுவித்திகழ்ந்த நட்ப உணர்வு அவளை அதனுள் ளேயே ஈடுபடச் செய்தது.

# 8

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்.

—தொல்காப்பியம்

கும்பகோணம் புகைவண்டி நிலையத்தில் இருந்து அரைக்கல் தொலைவில் காந்தி நகர் அமைந்திருக்கிறது. தெற்குப் புறமாக நேரே சாலை வழியாக நடந்து, இரண்டாவது திருப்பத்தில் மேற்கு முகமாகச் சென்று வலப்புறம் திரும்பினால் அதுதான் தில்லை வீதி, தில்லை வீதியின் கோடியில்தான் நந்தனின் வீடு அமைந்திருந்தது.

காம்பவுண்டிற்குள் தோட்டமும், தோட்டத்தின் நடுவே இரண்டடுக்குக் கொண்ட மாடி வீடும் இருந்தன. முகப்பில் போர்ட்டிகோ. போர்ட்டிகோவின் இரு பக்கத்திலும் வீட்டின் ராஜ கம்பீரத்திற்குக் கவரி வீசுவது போல இரண்டு விசிறி வாழைக் கன்றுகள், எதிரே செயற்கை நீரூற்று, போர்டிகோவிலிருந்து தார் போடப்பட்ட நடைபாதை கரும்பட்டு விரித்ததுபோல் காணப்பட்டது. அந்தப் பாதையின் இருமருங்கிலும், போர்ட்டிகோவின் அருகிலும், அழகாக கத்தரித்து விடப்பட்ட பச்சைப் புதர்ச் செடிகளும், மனோரஞ்சிதம், மல்லிகை, கனகாம்பரம் போன்ற மலர்ச் செடிகளும் அலங்காரமாகக் காணப்பட்டன. நடைபாதை வந்து முடியும் வெளி வாசலில், ஈயமுலாம் பூசப்பட்ட அழகிய பூவேலைப்பாடு கொண்ட இரும்புக் கிராதி கேட் அமைந்திருந்தது. வெளி வாசல் காம்பவுண்டில் பதிக்கப்பட்ட சலவைக் கல்லில் "அருள் நிலையம்" என்ற பெயர் பொறிக்கப் பட்டிருந்தது.

வீட்டின் மேல் மாடியில் நந்தனின் அறை இருந்தது. அவன் படிப்பது, நண்பர்களுடன் அளவளாவுவது, உறங்குவது எல்லாம் அந்த அறையில்தான். நந்தன் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டே ஏதோ ஒரு ஏட்டைப் படித்துக்கொண்டிருந்தான். திறந்திருந்த ஜன்னல் வழியாக கதிரவனின் ஒளிர்க் கதிர்கள் வந்து விழுந்தன. ஒரு மேஜை, நாற்காலி, கீழே தரையில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த படுக்கை, சுவரில் பெரிய அளவில் மாட்டப்பட்டிருந்த காந்தியடிகள், விவேகானந்தர், இராமலிங்க வள்ளலார் போன்றாரின் படங்கள், இத்துடன் மலைமலையாகக் கண்ணாடி பீரோக்களில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்கள்—இவைதான் அறையில் இருந்தன. வீட்டின் தோற்றத்திற்கும், அந்த அறையின் எளிமைக்கும் பெரிய முரண் இருந்தது. உண்மையான எளிமை என்பது துறவில்தான் இருக்கிறது. தனக்கு இல்லையே என்ற காரணத்தால் எளிமையை மேற்கொள்வது வாழ்க்கைப் போக்கை ஒட்டியது. இருந்தும் பற்

றுள்ளம் இன்றி வாழ்வதுதான் போற்றத்தக்க எளிமையாகும். அத்தகைய எளிமைதான் நந்தனின் அறையில் குடிகொண்டிருந்தது.

நடந்துகொண்டே கொஞ்ச நேரம் படிப்பதும், பின்புறமாகக் கையைக் கட்டிக்கொண்டு சிந்திப்பதுமாக இருந்தான். பின் பீரோவைத் திறந்து ஏதோ ஒரு நூலைத் தேடினான். பெர்னாட்ஷா, சாமர்செட்மாம், மறைமலையடிகள், மாக்ஸிம் கார்க்கி, தாகூர், கால்ஸ் வொர்த்தி, புதுமைப் பித்தன், ஹெமிங்வே, பாரதிதாசன் போன்றவர்கள் — அங்கங்கே பீரோவுக்குள் காட்சியளித்தனர். அப்புத்தகங்கள் அனைத்தும் ஏதோ ஒரு வரிசைக்கிரமத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததே தவிர, இலக்கிய விமர்சகனைப் போல ஆராய்ச்சி செய்து, தரம் பிரித்து, நந்தன் அவற்றை அடுக்கி வைத்திருக்கவில்லை. நந்தனை விட்டுவிடுங்கள். பொதுவாகவே பேசுவோம். தமிழுக்கு எங்கே ஐயா விமர்சக அறிவு இருக்கிறது? பிடித்தால் ஒரே அடியாகப் போற்றுவான். அழகான பிரிண்ட், நல்ல காலிகோ பைண்டு'' என்று கூறுவான். இல்லாவிட்டால் ஒரேயடியாகத் தூற்றுவான். ''இந்த ஆசிரியர் ஏன் இந்தப் புத்தகத்தை எழுதினாரோ தெரியவில்லை'' என்று சொல்லுவான். இல்லாவிட்டால் ''பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'' என்ற பரந்த நோக்கை இங்கேயும் காட்டிக்கொண்டு வாய் மூடி மௌனியாகிவிடுவான். தமிழ் நாட்டில் தான் இன்னும் உண்மையான இலக்கிய ஆராய்ச்சி தோன்றவில்லையே? பெயரைப் பார்த்துக்கொண்டுதானே விமர்சனம் எழுதுகிறான்? இந்த நாட்டிலே இலக்கியம் எங்கே உருப்படப் போகிறது.

நந்தன் பீரோவிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்தான். ஹெர்னெஸ்ட் ஹெமிங்வே எழுதிய 'கடலும் கிழவனும்' (ஓல்டு மேன் அண்டு சீ) என்ற நூல் அது. நோபல் பரிசும், புலிட்சர் பரிசும பெற்ற நூல். கலையழகோடு ஒரு லட்சிய மனிதனை—ஒரு செம்படவனை—ஹெமிங்வே அதில் சித்திரித்திருந்தார். அதை கையில் எடுத்து விரித்ததும் ஏதோ புத்துணர்ச்சி பெற்றவன்போல ஜிப்பாவின் கைகளை உயர்த்திவிட்டுக்கொண்டான்,

''தம்பி,....'' வேலைக்காரனின் குரல் கேட்டுத் திரும்பினான்.

''குளிக்க வில்லையா....? இன்று ஐயா வருவதாகச் சென்னார்களே'' மேல் துண்டை இடுப்பிலே கட்டிக்கொண்டு, வேட்டியால் உடலைப் போர்த்திக்கொண்டிருந்த வேலைக்காரக் கிழவன் சோமு அந்த அறையைக் கூட்டத் தொடங்கினான்.

''இன்றைக்கு லீவுதானே சோமு...கொஞ்சப் படிச்சிட்டே இருந்திட்டேன் அப்பா வந்தாலும் வந்திடுவாங்க. நீ வேலைகளைக் கவனி'' என்று கூறிவிட்டு, குளித்து முழுகிவிட்டு சாப்பிட வந்து உட்கார்ந்தான் சோமு ஒரு தட்டில் உணவு, பால் முதலியவற்றை எடுத்துக் கொண்டுவந்து எதிரே வைத்தான்.

''தம்பி, நிறையச் சாப்பிடுங்க....ஒரு வயதுப் பிள்ளை இப்படியா சாப்பிடறது......'' என்று சோமு பரிவோடு கூறினான்.

பாலைக் குடித்துக்கொண்டே, ''உனக்குத் தெரியாது சோமு, நாக்கு இருக்கே, அது ரொம்பக் கெட்டது. அதற்கு அளவுக்கு மீறி ருசி கொடுத்திட்டா அதையே கேட்டுக் கொண்டிருக்கும் நாக்கை அடக்க முயல வில்லை என்றால் உள்ளத்தை எப்படி அடக்க முடியும்? சோமு.... ..உலகத்தை யெல்லாம் வென்று அடக்கியாள்பவன் உண்மையிலே பெரிய மனிதன அல்ல தன்னைத்தானே அடக்கியாள்பவன் தான் பெரிய மனிதன். தாயுமானவர்கள் போன்ற அறவோர்கள் இதைத்தான் வலியுறுத்தி இருக்காங்க .....'' என்றான் நந்தன்.

சோமுவுக்குத் தாயுமானவர் பேரைச் சொன்னால் நன்கு புரியும். அவன் படித்திருந்தது என்னவோ ரொம்பக் குறைவுதான் என்றாலும் எப்படியோ பழங்காலத்துப் பாடல்கள் எல்லாம் அவனுக்கு மனப்பாடம் ஆகி இருந்தது.

''இதுமாதிரிக் கருத்தை எல்லாம் இப்ப எந்தப் பிரசங்கியுமே பேசுவதே இல்லியே தம்பி ...'' என்றான் சோமு.

''தமிழ் நாட்டிலே அரசியல் தலைவர்கள பெருத்திருக்கிற அளவுக்கு அறக்கருத்தைப் பரப்புகின்ற தலைவர்கள் யாருமே இல்லை'' என்றான் நநதன்.

சோமு மிக நல்லவன், நந்தன் பிறப்பதற்கு முன்பிருந்தே அவர்கள் வீட்டில் வேலைக்கு இருக்கிறான். நநதன் குழந்தையாக இருக்கும்

போதே அவனைத் தோளிலும், கையிலுமாகத் தூக்கி வளர்த்திருக்கிறான். அந்த முறையில் சின்ன எசமான் மீது அவனுக்குப் பாசம் உண்டு. நந்தனுக்கும் அவன்மீது தனிப்பட்ட அன்பு உண்டு "ஏதோ கட்டையைக் கீழே போடுற வரை சின்ன எசமானுக்கு ஊழியம் செய்தே வாழ்ந்திடுறேன்" என்று அவன் அடிக்கடி சொல்வது உண்டு. அவனுக்கு ஒன்றும் தலைக்குமேல் வேலை கிடையாது. தோட்டத்தைப் பார்த்துக்கொண்டு பங்களாவுக்குக் காவல் இருப்பது. நந்தனுக்கு வேண்டிய சிறு உதவிகளைச் செய்வது, அவ்வளவு தான், தஞ்சாவூரிலிருந்து நந்தனின் அப்பா வியாபார நிமித்தமாக இங்கே வந்து தங்குவதுண்டு. அந்த நாட்களில் மட்டும் கொஞ்சம் வேலை அதிகமாக இருக்கும், அவ்வளவு பெரிய பங்களாவில் நந்தன், சோமு, அவர்களோடு சமையற்காரன் ஒருவன் ஆக மூன்று பேர்மட்டுமே இருந்தனர்.

ஊரிலிருந்து காலை பத்து மணிக்கெல்லாம் நந்தனின் அப்பா வந்துவிட்டார். சோமு காய்கறிகள் வாங்கிவர மார்க்கெட்டுக்குச் சென்றிருந்தான். நந்தனோடு நடக்கும் தேர்வைப் பற்றிக் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தார். "தேர்வு முடிந்தவுடன் தஞ்சாவூருக்கு வந்திடு" என்றும் சொன்னார். "நாளையோடு தேர்வு முடிந்துவிடும், கொஞ்சம் வேலை இருக்கிறது. அடுத்த வாரம் ஊருக்கு வருகிறேன்." என்றான் நந்தன்.

அதற்கு மேல் தான் பேச விழைந்த விஷயத்தை எப்படித் துவக்குவது என்று தெரியாமல் நந்தனை நோக்கி அவர் பேச ஆரம்பித்தார்.

"என் நண்பர் ஒருத்தர் இருக்கார். நாங்க படிக்கிற காலத்திலிருந்தே ரொம்ப அன்னியோன்னியமாக இருப்போம். அவருக்கு ஒரு பெண் உண்டு. நம்ம வீட்டுச் சம்பந்தம் என்றால் அவருக்கு மறுப்பு கிடையாது. இந்த ஆண்டிலேயே திருமணத்தை முடிச்சிடலாம்ன்னு நினைக்கிறேன்."

"இப்ப என்னப்பா இதற்கெல்லாம் அவசரம்"

"சொல்றதைக் கேளு, பெண்ணோட தகப்பனார் தன் சம்மதத்தைத் தெரிவித்துக் கடிதம் எழுதுவதாக சொல்லியிருக்கார். நீ படிக்கிற காலேஜ்லேதான் அதுவும் படிக்கிறது..."

"இன்னும் இரண்டு ஆண்டுகள் முடியட்டும்....பிறகு பார்த்துக்கலாம்" என்று நந்தன் கண்டிப்பாகக் கூறினான், அவன் பேச்சிலே காணப்பட்ட அழுத்தம் பெரியவரை அதற்கு மேல் பேசவிடாமல் செய்தது. அதற்குள் யாரோ ஐந்தாறு பேர் அவரைத் தேடிக் கொண்டு வந்ததனால் அவர்களை வரவேற்பதிலே பெரியவர் முனைந்துவிட்டார், நந்தனும் அதுதான் சமயம் என்று கருதித் தன் அறைக்கு வந்து புத்தகத்தை எடுத்து, விட்ட இடத்திலிருந்து படிக்கத் தொடங்கினான். ஆனால் அவன் மனம் விட்ட இடத்திலிருந்து கற்பனையில் தொடர்ந்து ஈடுபட்டது.

திருமணம் என்று எண்ணிய உடனேயே அவன் நினைவுகள் எழில்மதியைத் தாவின. எந்த ஒருத்தி தன் முழுநெஞ்சையும் ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறாளோ, அவளை உதறி எறிந்துவிட்டு இன்னொருத்தியை மணக்க வேண்டும் என்பதை அவனால் எண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லை.

பார்க்கப்போனால் காதல் என்பது ஒன்றுக்காக மற்றொன்று தன்னை முழுதும் இழந்து கொள்வதுதான். இன்னும் சொன்னால், ஒரு மனத்திற்கு இன்னொரு மனம் முழு அடிமையாகி விடுவதுதான் காதலாக இருக்கிறது. தண்டனைக்கோ, பிறவற்றிற்கோ அஞ்சி புறத்தை அடிமையாக்கிக் கொள்ள யாராலும் முடியும், ஆனால் தன்னுடைய நெஞ்சத்தை மற்றொன்றிற்கு அடிமைப்படுத்திக் கொள்வதோ, அல்லது தனக்கு அடிமைப்படும் ஒன்றை மனமார ஆட்கொண்டு விடுவதோ அத்தனை எளிதானதல்ல, நந்தனுடைய காலடியில் எழில்மதி என்றைக்கோ தன்னைத் தானே ஆத்ம நிவேதனம் செய்துகொண்டு விட்டாள். இதையெல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது நந்தனால் விரைவில் தீர்மானத்திற்கு வரமுடியவில்லை, இன்பம் நுதலிய காதல் என்பது எல்லா உயிர்களுக்குமே இயற்கையானது என்ற தொல்காப்பியக் கருத்து அவன் நினைவுக்கு வந்தது.

விசாலமான கற்பனைக்கு உள்ளாகாமல், வரையறுக்கப்பட்ட யதார்த்த பாவத்துடன் அமைந்திருக்கும் சித்திரத்தைப் போல அழகுடன் விளங்கும் எழில்மதியின் வடிவமே அவனை முழுதும் ஆட்கொண்டிருந்தது. சில நாட்களுக்கு முன் தான் எழில்மதியைச் சந்தித்ததும், அவன் அப்போது குறிப்பிட்ட ஒரு சில உள்ளம் உருக்கும் வாசகங்களையும்

அவன் எண்ணிக் கொண்டான். சிறக்கணித்துப் பார்த்தபடி, பூவிதழின் மடிந்த விளிம்பைப் போல் மேல் நோக்கிச் செழித்த இமைகளை, மிக நளினமானதோர் இன்பாகசியத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக உதிர்ப்பது போல, மெல்ல மூடித்திறந்து, "இந்தப் பேதையின் நெஞ்சம் என்றும் தங்களையே சரண் அடைந்திருக்கும்; என் கண்ணினுள் மணி போல நீங்கள் என்றும் என்னுள்ளேயே இருந்துகொண்டிருக்கிறீர்கள்" என்று கூறியது அவனுடைய ஞாபகத்தில் மின்னி மறைந்தது. அதைத் தொடர்ந்து அவள் கல்லூரி விழாவில் பாடிய பாட்டும் நினைவுக்கு வந்தது.

"தில்லைக்குச் செல்லாமல் இருப்பேனோ"— என்ற நந்தனின் பாட்டை யல்லவா பாடினுள்! அந்தப் பாட்டைப் பாடுவதன் மூலம் அந்தப் பேதைப் பெண் என்னையல்லவா மானசிகமாகத் தன்னுள் பாவித்துக் கொண்டாள்!— என்று எண்ணிக் கொண்டான், மற்றவர்களுடைய அன்பிற்குப் பாத்திரமாக இருக்கிறோம் என்று எண்ணுகிறபோது ஏற்படுகிற ஒரு பெருமிதம் அதிலும் ஒரு பெண் தன்னை நேசிக்கிறாள் என்று உணர்கிறபோது ஒரு ஆடவனுக்குத் தோன்றுகிற பெருமிதம்— நந்தனிடத்தில் களைகட்டி நின்றது. காதல் என்பது கிடைததற்கரிய ஒன்று, ஒருவன் காதலிக்காமலே வாழ்ந்து மடிந்து விடுவதை விட, ஒரு முறையாவது ஒன்றை மனமாரக் காதலித்து அதில் தோல்வியுற்றாலும் அது இன்பமானதே ஆகும்.

அவள் அன்று அந்த நேரத்தில் பாடிய கீதம். அதற்குப் பின் அவளை நினைக்கும் போதெல்லாம் அவனுள்ளே ஒலிததுக் கொண்டே இருந்தது. அந்தக் கீதத்தை இசைத்துக்கொண்டால் அதுவே அவளது உருவகமாவதை அவன் அறிந்தான். இதையெல்லாம் ஒருபுறம் எண்ணிப் பார்த்துவிட்டு, என்றுமில்லாத முறையில் தந்தையார் திடீரென்று துவக்கிய திருமணப் பேச்சையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது அவன் துடித்துப் போனான், பெருமூச்சும் கண்ணீரும் தான் காதல் சரித்திரத்தின் பெரும்பகுதியாக அமைந்திருக்கிறது!

வெளியே நந்தனின் அப்பா வந்தவர்களோடு பேசிக்கொண்டிருந்தார். வந்திருந்தவர்கள் ஏதோ ஒரு சபையின் காரியதரிசிகள். நன்கொடைக்காக வந்திருந்தார்கள். இந்தக் காலத்தில்தான் எடுத்ததெற்கெல்லாம் நன்கொடை உண்டியல் தூக்குவது வழக்கமாகி விட்டதே!

வெற்றிலைக் காவி படிந்த பற்களை வெளியே காட்டி அசட்டுத் தனமாகச் சிரித்துக் கொண்டே "அரண்மனைத் தோட்டத்திலே தான் நாடகம், பள்ளிக்கூட நிதிக்காக நடிகர் ஒருத்தர் நடிச்சி தரதா ஒத்துண்டிருக்கார். ஏதோ தயவு பண்ணனும், நாங்க ஒண்ணும் கண்டிஷன் போடலே ... அது அவா அவா விருப்பம்" என்று ஒருவர் சொல்லிக்கொண்டிருந்தார், மற்றொருவர் ரசீதுப் புத்தகத்தை தயாராக எடுத்துக் கையிலே வைத்துக் கொண்டிருந்தார், நந்தனின் அப்பா யார் எதற்கு என்று வந்தாலும் ஏதோ கையில் இருப்பதைக் கொடுத்து அனுப்பி விடுவார், அப்படிப்பட்ட சுபாவம் அவருக்கு, வந்தவர்களை ஒருவகையாக அனுப்பிவிட்டு உணவை முடித்துக்கொண்டு, நந்தனின் அப்பா களைப்பு தீரச் சற்று படுக்கையில் சாய்ந்தார்.

மாலை நான்குமணியளவில் சோமு போர்ட்டிகோவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரைத் துடைத்துக் கொண்டிருந்தான். எஞ்சின் சூடாகி இருந்ததால் காரின் முன் பக்கத்தைத் திறந்து அதன் வயிற்றில் ஒரு வாளித் தண்ணீரைக் கொண்டுவந்து கொட்டி விட்டு, காரின் எண் பொறிக்கப்பட்டிருந்த உலோகப் பலகைக்கு 'பிராஸ்ஸோ' போட ஆரம்பித்தான்

நந்தன் கல்லூரி விடுதிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். இளங்கோவைப் பார்த்து ஏறத்தாழ ஒருவாரம் ஆகி இருந்தது. இன்றைக்கு விடுதிக்குப்போய் அவனைப் பார்க்காவிட்டால் அவனுக்குக் கோபம் வந்துவிடும். தேர்வு நாட்களாக இருந்த காரணத்தால் கல்லூரி சென்று தேர்வு எழுதிவிட்டு அவனைப் பாராமலே நான்கு ஐந்து நாட்களும் வந்து விட்டான்.

இளங்கோவுக்குக் குழந்தை உள்ளம், நந்தன் அவனைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் அவனது தீவிரமான அன்பில் தன்னை மறந்து விடுவான். சில சமயங்களில் யார் மீதாவது தீவிரமான அன்பைச் சொரிந்தால் ஒழிய மனிதனுக்குத் திருப்தி உண்டாவதில்லை. இளங்கோவின் அன்பும் அத்தகை

யது தான், சில சமயங்களில் காரணம் இல்லாமலேயே சண்டை பிடித்துக் கொண்டு இரண்டு நாட்கள் பேசாமலேயே இருப்பான். இளங்கோவினுடைய அன்பின் ஆழம் நந்தனுக்கு நன்கு தெரியும். நண்பர்களிடையே ஏற்படுகின்ற பிணக்கும், பூசலும், காதலர்களுடைய வாழ்வில் ஏற்படும் ஊடலும், தணியும் போன்றதுதான் என்று எண்ணிக் கொள்வான், உண்மையாக நோக்கினுல் நட்பும் காதலும் ஒன்றுதான், நட்பில் இல்லாத ஒன்று காதலில் அதிக இடம் பெற்றுள்ளது, மாறுபாடு அவ்வளவே.

ஒரு முறை இளங்கோ தன் கிராமத்திலிருந்து நந்தனுக்கு எழுதிய கடிதத்தில் கூட தன் அன்பை எல்லாம் கொட்டிக் காட்டி இருந்தான். ஆத்திரையன் என்ற புலவர் ஒருவர், தன்னேடு உருவலன்பு பூண்டிருந்த ஆதனுங்கன் என்ற அரசனை நோக்கி "இறைவ, நீ எப்போதும் என் நெஞ்சில் இடம் பெற்றுள்ளாய்; என் நெஞ்சைத் திறப்போர் உன்னை அங்கே காண்பர் பலரையும் பாதுகாத்து, அறத்துறையில் ஈடுபட்டிருக்கும் உன்னை ஒருக்காலும் மறவேன், மறத்தற்குரிய காலம் என்று ஒன்று உண்டாயின் அது என் உயிர் உடலைவிட்டுப் பிரியும் காலமேயன்றி வேறில்லை" என்று கூறுவது போன்ற கருத்துடைய என்ற புறநானூற்றுப் பாடல் வரிகளை

"எந்தை வாழி ஆதனுங்க என்
நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே
நின்னியான் மறக்கும் காலை
என்னுயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்
என்னியான் மறப்பின் மறக்கு வென்"

எடுத்துக் காட்டி. "என் அன்பிற்குரிய நந்தா, இந்தப் பாட்டையே என் குரலாகக் கொள்" என்று உள்ளம் உருகுமாறு எழுதியிருந்தது நந்தனுக்கு அடிக்கடி நினைவுக்கு வரும்.

"டேய், சோமு....நான் கல்லூரி விடுதிக்குப் போய்விட்டு வர்ரேன்... அப்பா எழுந்தோண்ணே சொல்லு ...." என்று சொல்லி விட்டு சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான் நந்தன்.

அன்புநிலை செய்ய என்னை
ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானே வந்து
எய்தும் பராபரமே!

—தாயுமானவர்

காந்தி நகரிலிருந்து சைக்கிளில் புறப்பட்ட நந்தன் சபாபதி முதலியார் தெருவைக் கடந்து தெற்கு முகமாகத் திரும்பியபோது மூலைக் கடைக்காரன் "சார், சார்" என்று குரல் கொடுத்தான். புத்தகக்கடை ஆழ்வாருக்கும் நந்தனுக்கும் பழக்கம் உண்டு, ஆழ்வார் ஒரு பழைய புத்தக வியாபாரி. அத்தோடு பீடி; சுருட்டு, பீடா முதலிய சில்லறை வியாபாரமும், நாள், கிழமை, திங்கள் இதழ்களின் வியாபாரமும் உண்டு.

ஆழ்வாருக்கு இன்றைக்கெல்லாம் முப்பது முப்பத்தைந்து வயதிருக்கும், மீசையும் தாடியும் வைத்துக் கொண்டிருப்பார், நெற்றியில் மட்டும் திருநாமக் குறி எப்போதும் காட்சியளிக்கும் நந்தனைப் பார்க்கிறபோது "சார்.... எங்கே நெற்றியில் விபூதியைக் காணோமே.... என்னசார்" என்பான். "இல்லே ஆழ்வார், பூசுவது உண்டு .... வெளியில் புறப்பட்டால் வேர்வையாலே அழிந்து விடுகிறது" என்பான் அவன், இப்படிப்பட்ட பதிலை யார் சொன்னாலும் "அதனாலேதான் சார் .... நான் சொல்றேன்....திருமண் குறி போட்டுக்குங்கோ ... விபூதி மாதிரி திருமண் என்றைக்கும் அழிவதில்லை" என்று கூறி வைணவததிலே தனக்குள்ள உறுதிப்பாட்டை மெய்ப்பித்துக் கொள்வான் பெரிய, பெரிய பைகள நிறைந்த காக்கிச் சட்டையும, அதே நிறத்தில் அமைந்த முழுக்கால் சட்டையும் அவன் உடம்பிலே ஒட்டிக் கொண்டிருக்கும். ஆழ்வார் வாழத் தெரிநதவர். வருவோருடன் சிரித்துப் பேசிக்கொண்டே காரியத்தைச் சாதித்து விடுவார், "என்ன சார்...பீடா போடறீங்களா?" என்று கேட்டுக்கொண்டே நலல கொழுந்து வெற்றிலையில் வறுத்தெடுத்த தஞ்சாவூர் நெய்ச்சீவலை அள்ளி வைத்து, அத்தோடு கொஞ்சம் குங்குமப்பூ வையும் சேர்த்துச் சுருட்டும்போது அப்படியே ஆளையும் சேர்த்துச் சுருட்டி விடுவதில் ஆழ்வார் கைகாரர். ஆழ்வாருக்குப் படிப்பு அதிகம் இல்லை என்று

னும் நல்ல ஞானஸ்தன் என்று சொல்வார்கள். எல்லாம் அனுபவத்தால் வந்த அறிவு.

நந்தனைக் கண்டதும் கைதட்டிக் கூப்பிட்ட ஆழ்வார் அவன் வந்ததும்'' என்ன சார்.... கவனிக்க மாட்டேங்கறீங்க....இந்த ஆழ்வாரை மறந்துட்டீங்களா ? பார்த்து ரொம்ப நாள் ஆச்சே'' என்றார்.

''ஆமாம் ஆழ்வார்....பரிக்ஷை சீசன் பாரு.... எனவே தான இந்தப் பக்கம் வரல்லே ... சௌக்கியமாய் இருக்கியா ' என்றான் நந்தன்.

'' சௌக்கியத்திற்குக் குறைச்சல் இல்லீங்க ...ஆனா வியாபாரம்தான் டல்லு ... என்ன வச்சிருக்கிற தொழிலு அப்படிப்பட்டது'' என்று கூறிவிட்டு நந்தனை நோக்கினார் ஆழ்வார். ஆழவார் அப்படி நோக்கினால் அந்தப் பார்வைக்கு அவர் ஏதோ ஒரு புதிய கருத்தைச் சொல்லப் பீடிகை போடுகிறார் என்று பொருள்.

'' அப்படி ஏன் விரக்தியா பேசறே''

'' பின்னே என்ன சார்...தமிழ் நாட்டிலே எவன் சார் புஸ்தகம் காசுகொடுத்து வாங்கிப் படிக்கறான் ... எல்லாரும் ஓசியிலே தானே படிக்கிறான்க, இந்த நிலையிலே நான் புஸ்தகக் கடை வச்சிருக்கேனே அதைச் சொல்லுங்க...''

''ஆழ்வார், புத்தகத்தைக் காசு கொடுத்து வாஙகவில்லையே என்று வருத்தப்படறே. அது ஒரு விததிற்குச் சரி, இனனும் நமம நாட்டிலே புத்தகததைப் படிக்கவே தெரியாமல் இருக்கிறார்களே மக்கள் .... அவர்களைப் பற்றி நீ வருததப்படலியே'' என்றான் நந்தன்.

''படிக்காத மக்கள் என்றைக்குமே நல்லவர்கள், படிக்காதவன் கூடக்காசு கொடுத்து வாங்கிய பிறரைப் படிக்கச் சொல்லி கேட்கறான். ஆனால், படித்தவன்—படிக்கத் தெரிஞ்சவன்—வருமானமும் வசதியும உள்ளவன்—புத்தகததை வாங்குவதில்லே, பின்னே எப்படி சார் இந்த நாட்டிலே எழுத்தாளன் வாழமுடியும் ? பதிபபகத்தான் வாழமுடியும் ? என்னைப் போன்ற சில்லறை வியாபாரிகள் பிழைக்க முடியும் ? எனறு ஒரு நீண்ட பேச்சைப பேசி முடித்தார் ஆழ்வார்.

அப்பொழுது ஒரு சிறுமி—ஏழெட்டு வயதிருக்கும—கந்தல் பாவாடையும், பரட்டைத் தலையுமாகக் கண்களைப் பிசைந்தபடி அழுது கொண்டே வருவோர் போவோரிடம் கையை நீட்டிக் காசு கேட்டுக் கொண்டிருந்தாள். அவளது குறு குறுத்த கண்களையும், இந்த வயதிலேயே பிறரிடம் பிச்சை எடுத்து வாழவேண்டிய நிலை அச்சிறுமிக்கு வந்து விட்டதையும் கண்ட நந்தன் கொஞ்ச நேரம் தீவிரமாகச் சிந்தித்து விட்டு ''பாவம்'' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான். அதைக் கண்ட ஆழ்வார் '' சார் .... நான் சொல்றேண்ணு கோபிச்சுக் காதீங்க....இந்தத் தமிழ் ஜாதி உருப்படப் போறதில்லே, இன்னும் ஆயிரம் தலை முறைக்குப் பிறகும் கூட இந்த ஜாதி நல்லா வாழும்கற நம்பிக்கை இல்லே இல்லாட்டா இது மாதிரி ஒரு பெண்ணைப் பிச்சை எடுக்க விட்டு விட்டு இநதத் தமிழ் ஜாதி பார்த்துக் கொண்டிருககுமா ? எந்த இஙகிலீஷ்காரனாவது, எந்த வடநாட்டானாவது இபபடித் தமிழ் நாட்டிலே பிச்சை எடுககறானா ? நம்ம தமிழன் தானே சார் பிச்சை எடுக்கறான், தமிழ் நாட்டை விட்டுத் தள்ளுங்க, உலகத்லே எந்தக் கோடியிலே ஒருவன் பிச்சை எடுத்தாலும் அவன் தமிழ் ஜாதியைச் சேர்ந்தவனாகத்தானே இருக்கான்'' என்று சொல்லி விட்டு நந்தனைப் பார்த்தான்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கிற போது ஒரு இளைஞன் கடையை நெருங்கி, அடுக்கி வைக்கப்பட்டிருந்த பழைய புததகங்களை ஒரு பார்வை பார்ததுவிட்டு ''சார் ..பிரபல எழுத்தாளர் நவீனன் எழுதிய '' ஓடிவந்த ஒய்யாரி'' என்ற துப்பறியும நாவல் இருக்கா சார் ? '' என்றான், ஆழ்வார் என்ன நினைத்தாரோ தெரியவில்லே, அந்த இளைஞனை ஏற இறங்கப் பார்ததுவிட்டு ''வழிகாட்டி'' எழுதிய ''இருட்டில் விழுந்த இளைஞன்'' என்ற நூல் இருக்கு, வேணுமா ?'' என்றார், வந்த இளைஞனோ இல்லை என்ற பதிலைக் கேட்டவுடன் வேறு எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் அப்பால் சென்றான். ''பார்ததீங்களா, தமிழ் நாட்டின் இலக்கிய ரசனையை?'' என்று பெருமூச்சு விட்டார் ஆழ்வார்.

அப்பொழுதுதான் அந்த இளைஞனிடம் நெருங்கிய அநத ஏழைச் சிறுமி ' அண்ணா, அண்ணா, காலணா தர்மம் அண்ணா'' என்று கெஞ்சினாள். அநத இளைஞன் அச்சிறுமியை ஒருவிதமாகப் பார்த்துவிட்டு '' உனக்கு எப்படிக் கொடுக்கறது? இன்னும் ரெண்டு வயசு

அதிகமா இருந்தாக்கூட பரவாயில்லே. இப்ப பயன்பட மாட்டியே" என்றான், தூரத்தில் நின்றபடி அந்தப் பதிலைக் கேட்டுக் கொண்டிருந்த நந்தனுக்கு யாரோ தன் இதயத்தை முள்ளால் 'சுருக்'கென்று குத்துவதுபோல் இருந்தது. அந்த இளைஞன் சொன்ன வாசகங்களைப் புரிந்து கொள்ளக்கூட வயது வராத அந்தச் சிறுமி, தன் பசியைக் கூட மறந்து சற்று நேரம் தெருவில் போகும் வண்டிகளை வேடிக்கை பார்க்கத்தொடங்கி விட்டாள்.

## 9

"பெண்மைக்கு மதிப்புக் கொடுத்துப் போற்றிய இந்தத் திருநாட்டிலேதான் இந்த நிகழ்ச்சிகள் நடக்கின்றனவா?" என்று நந்தன் எண்ணிக் குமுறினான்.

"என்ன சார் சிந்திக்கிறீங்க?" என்றார் ஆழ்வார்.

"ஆமாம்பா, இந்த நாட்டிலே ஒழுக்கமும், பண்பாடும் வர வரக் குறைந்து போய்க் கொண்டே இருக்கு, மனிதன் அறிவு இல்லாமல் இருக்கிறான் என்பது இழிவு இல்லை. ஒழுக்கமும், பண்பாடும் இல்லாமல் இருப்பது தான் மிக இழிவு, படிக்காதவனை முட்டாள் என்று கூறி நகைக்கின்ற மக்கள் ஒழுக்கமில்லாதவனை மட்டும் தாழ்வாக நினைப்பதில்லை" என்று கூறிவிட்டு அந்தச் சிறுமியைத் தன் பால் அழைத்து ஒரு நாலணா நாணயத்தைக் கொடுத்தான், இதைப் பார்த்த ஆழ்வார் கனைத்துக் கொண்டே "சார்...எனக்கு இப்ப புதுசா ஒரு சந்தேகம் வந்திட்டுது. நீங்க காசு கொடுத்தீங்க. அது சரி, இந்த நாலணாவின் மூலம் அவள் வாழ்க்கைப் பிரச்சனை தீர்ந்து விடுமா? காட்டுத் தீயை ஒரு செம்புத் தண்ணீர் விட்டு அணைத்துவிட முடியுமா சார்" என்றார்.

"ஆழ்வார்...சமுதாய இயந்திரத்தில் எங்கேயோ ஏற்பட்டு விட்ட கோளாறினால் இத்தகைய ஏழைகள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களை வாழவைக்க நாம் முயன்றால் நிச்சயம் முடியும், மனமாற்றம் தான் தேவை. இயன்ற அளவுக்கு ஒவ்வொருவனும் பிறரிடம் அன்பு காட்டி -உதவிபுரிய முன் வருவான் ஆனால் பிரச்சனை ஓரளவுக்குத் தீர்ந்துவிடும். தாயுமானவரும் இதைத் தான் சொல்லுகிறார். 'அன்பு நிலை செய்ய என்னை ஆளாக்கிவிட்டு விட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே' என்று பாடி இருக்கிறார்" என்றான்.

"அது சரி சார்...நான் இரக்கப்படறதில்லை. உங்களால் உதவமுடிகிறது. இரக்கப்படுகிறீர்கள். நான் பார்த்து இரக்கப்பட்டால் என்னாலும் மகிழ்ச்சியாக இருக்கமுடிவதில்லை, ஒரு துன்பத்தைத் தீர்க்கும் ஆற்றல் இல்லாதவன் அந்தத் துன்பத்தைப் பார்த்து இரக்கப்படுவதனால் பயன் உண்டாவதில்லை"

"சரி ... ஆழ்வார் ... நான் கல்லூரி விடுதிக்குப் போகணும். நாளைக்குத் தேர்வும் உண்டு, பிறகு சாவகாசமாகப் பேசுவோம், என்ன நான் வரட்டுமா?" என்று கேட்டுக் கொண்டு புறப்பட்டான்.

நந்தன் கல்லூரி விடுதிக்கட்டிடத்தை நெருங்கும்போது பின்புறம் இருந்து சைக்கிள் மணி "கிணிங் கிணிங்" என்று அடிப்பதைக் கண்டு, சைக்கிளின் வேகத்தைக் குறைத்துத் திரும்பிப் பார்த்தான்.

போஸ்டுமேன் "சார் ... உங்க பிரண்ட் இளங்கோவுக்கு ஒரு டெலகிராம் இருக்கு! சார்" என்று சொல்லிக்கொண்டே இறங்கினான். நந்தன் போஸ்டுமேனிடம் கையெழுத்திட்டு தந்தியை வாங்கிக் கொண்டவுடன் அவன் பறந்தான். தந்தியைப் பிரித்தபோது நந்தனின் கரங்கள் நடுங்கின, அவனுக்கு இந்த அண்ட கோளமே சுற்றிச் சுழல்வது போன்ற பிரமை உண்டாகிறது. கடை விழியில் பனித்த நீர்த்துளிகளை விரல்களால் துடைத்து எறிந்துவிட்டு அப்படியே ஒரு கணம் சிந்தித்தான், அடுத்த கணம் அவனுடைய சைக்கிள் ஹாஸ்டலுக்குச் செல்லாமல் காந்தி நகரினை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.

(தொடரும்...)

Published by Sakunthala Krishnan, 27, Rajagopal Naicken St., Chintadripet, Madras-2, Printed by R. Ravi